DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.46/2024

Deposition of Witness of PW6

Name	:	கல்யாணி	Calling	:
Father/Husband's Name	:		Age	:
Village	:			:
Taluk	:			:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th பிப்ரவரி 2026.

1ம் எதிரி பாசில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.
2வது எதிரி இறந்துவிட்டார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோடு பொருளாதார குற்றபிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 02.08.2019ம் தேதி மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் இந்துஜா பதிவு செய்த நிலைய குற்ற எண்.349/2018 இதச பிரிவு 380, 511 இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கையை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 02.08.2019 ம் தேதி பகல் 14.45 மணிக்கு நான் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜாமணி, தலைமை காவலர் 1644 குணசேகரன் ஆகியோருடன் நிலைய சரகத்தில் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு அந்நிய சந்தேக நபர்களை கண்காணித்தும் குற்றம் நடக்காமல் தடுக்கும் பொருட்டு புறப்பட்டு மொடக்குறிச்சி காட்டுப்பாளையம் சாவடிப்பாளையம், ஆகிய இடங்களில் கண்காணித்தும், நஞ்சை ஊத்துக்குளி பஸ் ஸ்டாப்பில் அருகில் வந்து கண்கானித்த போது சந்தேகப்படும்படியாக 2 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

2.எங்களை கண்டதும் அந்த இடத்தை விட்டு செல்ல முயன்றவர்களை சந்தேகத்தில் பேரில் பிடித்து விசாரிக்க தங்கள் பெயர், விலாசங்களை மாறி மாறி கூறி இறுதியாக தங்களது பெயர்கள் பாசில், பிரவீன்குமார் என்று கூறி இந்த

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.24 18:08:54 +0530

வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை மதியம் 15.00 மணிக்கு கைது செய்து 15.15 மணிக்கு தனித்தனியாக இருவரையும் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று 18.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 07.08.2019ம் தேதி எனது புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரிகள் மீது குற்ற 457, 380, 511 இதச ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் சான்று ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் எதிரியை கைது செய்யவும் இல்லை, ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. கைது செய்வதற்கு முன்பு எதிரிகளை விசாரணைக்கு அழைத்து வந்து காவல் நிலையத்தில் தயார் செய்து பொய் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.24 18:09:05 +0530